# வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
## WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Girraween Public School, 9 Bando Road Girraween NSW 2145

# ஆண்டு 5 - பேச்சுப் போட்டி

**போட்டி நடைபெறும் திகதி: 19.05.2018 (3.15 pm)**

**நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.**

## தாய் மொழியே வாய்மொழியாம்.

உலகில் ஒவ்வொரு இனத்திற்கும் அவர்களது தாய்மொழியே வாய்மொழியாகும். மனிதன் தோன்றிய காலத்திலிருந்து தனது எண்ணங்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்கு மொழியைக் கையாண்டான். எமது அன்றாட வாழ்வில் இலக்கண வடிவத்தைக் கைவிட்டு, நடைமுறையில் பேசத் தொடங்கிய மொழியே வாய் மொழியாகும்.

நாம் தமிழர், எமது இனம் தமிழ் இனம், பேசும் மொழி தமிழ் மொழி. எமது பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் வேறுபாடு உள்ளது. தமிழ் மக்களிடையே இடத்துக்கிடம், கிராமத்துக்குக் கிராமம் வாய்மொழி வேறுபடுகின்றது. உதாரணமாக இந்தியத் தமிழர்களது வாய்மொழிக்கும் இலங்கைத் தமிழர்களது வாய்மொழிக்கும் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இன்று உலகில் ஏறக்குறைய ஏழு கோடி தமிழர்கள் தம் தாய் மொழியான தமிழை வாய்மொழியாகக் கொண்டுள்ளனர்.

நாம் புலம்பெயர்ந்த நாட்டில் வாழ்ந்து வருகின்றோம். இங்கு அந்நிய மொழியே முதன்மையாக இருக்கின்றது. ஆகவே, எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை வாழவைப்பதற்கு, எம் இனத்தவரைக் காணும் போதெல்லாம் தமிழில் உரையாடுவோம். அத்துடன், தமிழ் நூல்களையும் வாசிப்போம். இதன் மூலம் நம் தாய் மொழியாம் தமிழை வாழ வைப்போம்.

தமிழில் பேசுவோம், தமிழராய் வாழ்வோம்.

நன்றி, வணக்கம்.